# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 18 | August ஆகஸ்ட் | 2017

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

யோவான் 8:32




கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்


**அனைவருக்கும் 71வது சுதந்திரதின வாழ்த்துக்கள்!**

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆவிக்குரிய சுதந்திரம் | 3 |
| புதிய உடன்படிக்கையின் மேன்மை | 7 |
| தானியேல் | 9 |
| பெண்கள் பகுதி | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
**6** மணி முதல் **6-30** மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)


### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி


செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.








**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**
**"கிறிஸ்து அருளின சுதந்திரத்தை உணர்த்தும் வார்த்தை"**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol. 91**

# ஆவிக்குரிய சுதந்திரம்

P.C. பிலேமோன் ராஜா



அன்பான வாசகர்கள் அனைவருக்கும், நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்ட, விடுதலை நாயகர் இயேசு கிறிஸ்துவின் வெற்றியுள்ள நாமத்தினாலே எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள். மேலும் உங்கள் அனைவருக்கும் 71 வது சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

நாம் இந்த மாதம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து நமக்கு உண்டாக்கின, கொடுத்த சுதந்திரத்தைப் (விடுதலை, சுயாதீனம்) பற்றி அறிந்துகொள்வோம்.

## 1. கிறிஸ்துவினால் நமக்கு சுதந்திரம் உண்டானது:

பரலோக தேவனால், நாம் இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் ஆண்டுகொள்ளும்படி படைக்கப்பட்டவர்கள் **(ஆதி 1:28).** ஆயினும் தேவ கட்டளையை மீறி நடந்து பாவம் செய்தபடியினால், பரலோக பிதா நமக்குக் கொடுத்த சுதந்திரத்தை நாம் இழந்து, அடிமைகளாயினோம். அதாவது நமக்கு கையளிக்கப்பட்ட சுதந்திரத்தை, நமது சுயஇச்சையினாலே இழந்து, பாவத்திற்கும், உலகத்திற்கும், சாத்தானிற்கும் அடிமைகளாயினோம்.



ஆயினும் நம்மைப் படைத்த தேவன், நம்மை அப்படியே அடிமைகளாகவே விட்டுவிடாமல், தமது குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்மை மீட்டு, நம்மைப் படைத்த நிலைக்கு மீண்டும் நிலைப்படுத்த விரும்பினார். அந்த சுதந்திரம் (விடுதலை) கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டானது. **கலா 5:1** "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்."

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால், நாம் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டோம் **(கொலோ 1:13).** அதாவது, பிசாசின் ஆளுகையிலிருந்து நம்மை விடுவித்தார். நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் நீங்கலாகி மீட்கப்பட்டோம் **(கலா 3:13).** பாவம் மற்றும் மரணம் என்பவைகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டோம் **(ரோமர் 6:18; 8:2).** இந்த உலகத்தின் செல்வாக்கு மற்றும் வழிபாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டோம் **(கொலோ 2:16–23).**

அப்போஸ்தலனாகிய பவுல் **ரோமர் 7:24ல்** "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ?" என்று அறைகூவல் விடுத்தார். பவுலின் இந்த மாபெரும் அறைகூவலிற்குப் பதில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே! ஏனெனில், அவராலேயன்றி விடுதலை இல்லை.

**அப் 4:12** "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."

இயேசுகிறிஸ்து தருகின்ற விடுதலையே மெய்யான விடுதலையாகும். **யோவான் 8:36** "ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." ஆண்டவராகிய இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார் **(அப் 20:28).**

இயேசுகிறிஸ்து இன்றி நாம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் விடுதலை பெறவே முடியாது. இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார் **(யோவான் 14:6):** அவரே பாவிகளை இரட்சிக்க வந்த இரட்சகர். **1 தீமோ 1:15** "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது;..."

## 2. சுதந்திரத்தைப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன?

சுதந்திரம் கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. **கலா 2:4** "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை....". கிறிஸ்துவிற்குள்ளான இந்த சுதந்திரத்தை அனுபவிக்க ஒருவர் விரும்பினால், அவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விபட்டு **(ரோமர் 10:17),** விசுவாசித்து **(மாற்கு 16:16),**

பாவத்திலிருந்து மனந்திரும்பி (அப் 2:38), கிறிஸ்துவில் உள்ள தனது விசுவாசத்தை அறிக்கை செய்து (அப் 8:37), பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற வேண்டும் (அப் 22:16).

அதாவது, அந்த நபர் தேவனுடைய வார்த்தைக்கு திருமுழுக்கிலே கீழ்ப்படிவதின் மூலம், கிறிஸ்துவிற்குள்ளான சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்கிறார். ரோமர் 6:3−4 "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா ? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்."



அன்பானவர்களே ! உங்களில் யாராவது இந்த மாபெரும் பாக்கியத்தை இன்னும் பெறாமலிருந்தால், இந்தக் காரியத்தில் உங்களுக்கு உதவ நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

## 3. இயேசு, எவைகளிலெல்லாம் நமக்கு விடுதலை கொடுத்தார் ?

### அ) பாவத்திலிருந்து...

கிறிஸ்து நமக்குப் பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கிறார். அவர் நம்முடைய பாவத்திற்கான விலையை செலுத்தினார். ஏசாயா 53:5,6 "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது ; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்."

### ஆ) சாபத்திலிருந்து...

கிறிஸ்துவினாலே நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். கலா 3:13 "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்."

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவர்கள், அவருடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் உரியவர்களாக இருக்கின்றனர். நியாயப்பிரமாணத்தினாலே பிளவுபட்டிருந்த புறதேசத்தாராகிய நம்மையும், ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியான யூதர்களையும், இயேசுகிறிஸ்து ஒரே சபையாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். தேவனோடு சேர முடியாதவர்களாகிய நாம், கிறிஸ்துவினாலே தேவனுடையவர்களாகினோம். எபே 2:14−16 "எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்."

### இ) சாத்தானின் அதிகாரத்திலிருந்து...

சாத்தானின் அதிகாரத்திலிருந்தும், அவனது ஆளுகையிலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டோம் அதாவது விடுதலை பெற்றோம்.

கொலே 1:13 "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்".

சாத்தான் நம்மைத் தொட முடியாத ஒரு மகிமையான நிலையைக் கிறிஸ்து நமக்கு உண்டாக்கி கொடுத்தார். 1 யோவான் 5:18 "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." மேலும், சாத்தானை நம்முடைய காலின் கீழே தள்ளி மிதிக்கக்கூடிய கிருபையும் கொடுத்தார். ரோமர் 16 : 20 "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென்."

### ஈ) இந்த உலகத்தின் வழிபாடுகள் மற்றும் செல்வாக்குகளிலிருந்து...

இந்த உலகத்தின் வழிபாடுகளாகிய பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள், தீண்டாமைகள், மூடநம்பிக்கைகள், உயர்ந்தோர் தாழ்ந்தோர் மற்றும் ஏனைய பாகுபாடுகள் எல்லாவற்றிலுமிருந்து விடுவித்து, ஒன்றே குலம், ஒருவரே தேவன் என மனித இனம் அனைத்தையும் தமக்குள்ளே சமமாக்கினார். கலா 3:28 "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை.

அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்."

இந்த உலகத்தின் வழிபாடுகள் மற்றும் செல்வாக்குகள் ஞானம் என்று பேர் பெற்றாலும் அவைகள் பிரயோஜனமற்றவைகள் **கொலோ 2:20-23** "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் யோசனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன ? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது."

அப்பிரயோஜனமான அவைகளிலிருந்து நம்மை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து முற்றும் விடுவிக்கிறார்.

**உ) கவலை மற்றும் பயத்திலிருந்து...**

மனிதனை அழுத்துகிற பல்வேறு கவலைகள் மற்றும் பயங்களிலிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து விடுதலை கொடுத்துள்ளார். அவரது அழைப்பைக் கவனித்துப் பாருங்கள். **மத் 11:28** "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

கவலைகள் மற்றும் பயங்களிலிருந்து வெளியே வரும்படி போதித்தார் **மத் 6:27, 34** "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்."



மேலும், அவைகளிலிருந்து நம்மை விடுவிக்க, இந்த பூமியில் மனிதனாகப் பிறந்து, தன்னைத்தானே தியாகம் செய்தார்.

**எபிரேயர் 2:14-15** "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்." இன்னும் கிறிஸ்து தருகின்ற சுதந்திரத்தின் மேன்மையை சொல்லிக்கொண்டே போகலாம்.

### 4. சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்:

அன்பானவர்களே, கிறிஸ்துவினால் நமக்கு உண்டான இந்த மேன்மையான சுதந்திரத்தை, நாம் இழக்ககூடிய அபாயமும் இருக்கிறது என்று வேத வசனம் நம்மை எச்சரிக்கின்றது.

கிறிஸ்து தருகின்ற சுதந்திரத்தை, நாம் நம்முடைய துர்க்குணத்தைத் தொடர்வதற்குப் பயன்படுத்தக்கூடாது. அதாவது பாவத்திலே நிலைநிற்க, பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில், கிறிஸ்து நமக்கு அந்த சுதந்திரத்தை பாவத்தினைத் தொடர்வதற்காகத் தரவில்லை. மாறாக பரிசுத்தமாக வாழும்படியாகவே தந்திருக்கிறார்.

**1பேதுரு 2:16** "சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்."

கிறிஸ்து நமக்குத் தந்த சுதந்திரத்தை, நாம் முழுமையாக அனுபவிக்கலாம். ஆயினும் அதனை அனுபவிக்கிற முறை, இன்னொரு சகோதரரின், சகோதரியின் ஆத்துமாவிற்கு இடறல் உண்டாக்குவதாக இருந்துவிடக்கூடாது. **1 கொரி 10:29-33** "உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல், மற்றொருவனுடைய மனச்சாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன? மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக்குறித்து நான் தூஷிக்கப்படுவானேன் ? ஆகையல் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல, நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்."

கிறிஸ்து நாம் அறிந்து செய்ய வேண்டிய அனைத்தையும் போதித்துள்ளார். அதனைப் பரிசுத்த

ஆவியானவர் வேதாமத்திலே எழுதிக் கொடுத்துள்ளார். **2 தீமோ 3:16,17** "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."



புதிய (நவமான) போதனை மற்றும் வெளிப்படுத்தல் எது ஒன்றும் நமக்குத் தேவையில்லை என்பதே அதன் பொருள். ஆகையால் கிறிஸ்து போதித்ததற்கு எதிராகப் போதிக்கின்றவர்களுக்கு நாம் விலகி இருக்க வேண்டும்; இல்லையேல் சுதந்திரத்தை இழந்துவிடுவோம். **கலா 2:4** "கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று".

ஆகையால் தான், நாம் கிறிஸ்துவினுடைய சுதந்திரப் (சுயாதீன) பிரமாணமாகிய புதிய ஏற்பாட்டை வாசித்து, தியானித்து, அதில் சொல்லப்பட்டவைகளை செய்து பாக்கியவான்களாக வாழும்படியாக வேதவசனம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. **யாக் 1:25** "சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்."

### இறுதியாக....

பிரியமானவர்களே! சர்வ வல்ல தேவன் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால், நமக்கு பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாத்தானின் ஆளுகையிலிருந்தும், இந்த உலகத்தின் வழிபாடுகள் மற்றும் செல்வாக்குகளிலிருந்தும், கவலை மற்றும் பயங்களிலிருந்தும் கொடுத்த இந்த மாபெரும் மேன்மையான சுதந்திரத்தை, நாம் கர்த்தருக்குள்ளே மிகவும் மகிழ்ச்சியோடு அனுபவிப்போம். மேலும் இந்த மாபெரும் சிலாக்கியத்தை அநேகருக்கு அறிவித்து, அவர்களும் ஆசீர்வதிக்கப்பட, அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்போம்.

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# பாடம் : 4 புதிய உடன்படிக்கையின் மேன்மை

Jerry Bates



புதிய உடன்படிக்கை, பழைய உடன்படிக்கையிலிருந்து அநேக வழிகளில் மேன்மையுள்ளதாயிருக்கிறது. ஆனாலும் அவையெல்லாவற்றையும் முழுமையாய் நாம் விவாதிக்க இயலாது. எபிரேய எழுத்தாளர் இந்த காரியங்களைக் குறித்து சிறப்பான விவாதத்தை முன்வைக்கிறார். எனவே அவருடைய விவாதங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

## மேலான ஆசாரியத்துவம்

பழைய உடன்படிக்கை, ஜனங்களினிமித்தம் பலிகளைச் செலுத்தும்படி, ஆசாரியத்துவத்துக்கு ஏற்பாடு செய்தது. ஜனங்கள் நேரடியாக தேவனிடத்தில் அணுக அனுமதிக்கப்படவில்லை; மாறாக,அவர்கள் தங்களுடைய பலிகளையும் காணிக்கைகளையும் ஆசாரியர்களிடம் கொண்டு வரவேண்டும். அவர்கள் அவைகளைத் தேவனிடத்தில் செலுத்துவார்கள். இந்த ஆசாரியர்கள் லேவிக் கோத்திரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள். அதில் பிராதன ஆசாரியர்கள் ஆரோனின் சந்ததியிலிருந்து அபிஷேகம் பண்ணப்படுவார்கள். இந்த ஆசாரியர்களெல்லாரும் சாதாரணமான மனுஷர்கள். எனவே அவர்களிடத்திலும் தவறுதல்களும் பெலவீனங்களும் இருந்தன. தாங்களும் மனுஷர்களானதால், பிற மனுஷர்களுக்காகப் பரிதபிக்கும்படி அனுமதிக்கப்பட்டார்கள். **எபிரேயர் 5:2,3ல்** நாம் வாசிக்கிறோம், "தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே அறியாதவர்களுக்கும், நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிட வேண்டியது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது." ஆசாரியன் மற்றவர்களைப் போலவே பாவமுள்ளவனானபடியால், முதலாவதாக அவன் தனக்காகவும் பலி செலுத்த வேண்டும்; பிறகு அவன் மற்றவர்களுக்காகப் பலி செலுத்த வேண்டும்.

புதிய உடன்படிக்கையின் கீழ் மிக மிக மேலான பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் **(எபிரேயர் 4:14–16).** நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். ஏனெனில், அவர் மனுஷனாக வந்து நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். ஆகிலும் அவர் ஒரு போதும் சோதனையில் விழுந்து போகவில்லை ; ஒரு போதும் அவர் பாவஞ் செய்யவுமில்லை; ''பரிசுத்தரும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" **(எபிரேயர் 7:26)** இப்படியாக, அவருடைய ஆசாரியத்துவம் பழைய ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது.

இந்தப் புதிய உடன்படிக்கை, உள்ளானதும் ஆவிக்குரியதுமாகும். "...என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்..." **(எபிரேயர் 8:10).** முதலாம் உடன்படிக்கை கற்பலகைகளில் எழுதப்பட்டது; ஆனால் புதிய உடன்படிக்கை நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டது. தேவன் நேரடியாக வசனங்களை நம்முடைய இருதயங்களில் வைக்கிறார் என்பது இதன் பொருளல்ல. வேதத்தை வாசிப்பதிலிருந்தும் போதிக்கப்படுவதிலிருந்தும் நமக்கு அறிவு வருகிறது. "எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே," **(யோவான் 6:45)** நாம் தொடர்ந்து தேவனுடைய வசனத்தைக் கேட்கவும் கற்கவும் வேண்டும். ஆனால் இப்பொழுது வசனம் நம்முடைய இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது. பழைய உடன்படிக்கையின்கீழ் ஒருவர் மாம்சரீதியாகப் பிறந்து, அதன் தேவைகளுக்குரியவராக வாழ்ந்தார். பின்னதாக தேவனைக் குறித்துப் போதிக்கப்பட்டார். இப்பொழுது, ஒருவர் கற்று தேவனுக்குத் தன்னை இருதயப்பூர்வமாகக் கீழ்ப்படுத்தி, பிறகு அவர்

தேவனுடைய ராஜ்யத்துக்குரிய பிரஜையாகிறார். தேவனுடைய வசனத்தின் அர்த்தங்கள் இருதயத்தில் எழுதும்வரை, அது அவருக்கு பலனற்றதாகிறது.

இப்பொழுது நமக்கு தேவனோடு நெருங்கிய நட்புறவு உள்ளது. "நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" **(எபிரேயர் 8:10).** இவைகளெல்லாம் புதிய வார்த்தைகளல்ல, அவைகள் லேவியராகமத்திலும் காணப்படுகின்றன. இருப்பினும் இப்பொழுது இதற்கு மிக முழுமையான அர்த்தம் இருக்கிறது. பழைய உடன்படிக்கை உண்மையில் தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமிடையே மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்தியிருந்தது. இது தேவாலயத்திற்கும் ஆசாரியத்துவத்துக்கும் இடையிலிருந்த திரைச்சீலை மூலம் விளக்கப்படுத்தப்பட்டது. இப்பொழுது எல்லாருமே நேரடியாக தேவனை அணுகமுடியும். சகல கிறிஸ்தவர்களுமாகிய ஆண்களும், பெண்களும், சகல தேசத்தார்களும் பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்திற்கு சமமானவர்கள். ''கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" **(பிலிப்பியர் 4:5).** எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் நமக்குக் கிடைக்கும் **(பிலிப்பியர் 4:7).** "அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை." **(எபிரேயர் 8:11).** ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி, பழைய பிரமாணத்தின் கீழ் ஒருவர், பழைய உடன்படிக்கைக்குரிய மாம்சத்தின்படி பிறந்தவன். பின்னர் அவன் அந்த உடன்படிக்கைக்குரிய விதிமுறைகளால் போதிக்கப்படுவான். அநேகருக்கு அது, ஒரு குடும்பரீதியிலான அல்லது தேசீயரீதியிலான பழக்கமாகிவிடும். ஒரு தனி நபரின் ஒப்புக் கொடுத்தலாக இருக்காது. அநேகர் ஒருபோதும் கற்றறியாமல் தேவனுடைய போதனைகளைத் தங்களுடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். புதிய உடன்படிக்கையில் நாம் ஆவிக்குரிய பிறப்பை அடைவதன்மூலம் உடன்படிக்கைக்கு உட்படுத்துவதற்கு முன்பாகவே தேவனை அறிந்து கொள்கிறோம். மேலும் புதிய உடன்படிக்கை, சகல தேசத்தாரிலும் இருக்கிற சகல மனுஷருக்கும் உரியதாயிருக்கிறது. பழைய உடன்படிக்கையோ இஸ்ரவேலர்களுக்கு மட்டுமே உரியதாயிருக்கிறது.

## மேலான பலி

''ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்," **(எபிரேயர் 8:12).** "அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே." **(எபிரேயர் 10:4).** பழைய பிரமாணத்தின் கீழ் பலிகளின் இரத்தம் "உலகத்தின் பாவங்களை சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி"யைச் சுட்டிக்காட்டக் கூடியதாயிருந்தது **(யோவான் 1:29).** பழைய ஏற்பாட்டு பலிகள் நினைவுகூருதலைக் கொண்டுவந்தது; முழுமையான பாவ நிவர்த்தியை கொண்டு வரவில்லை **(எபிரேயர் 10:3).** ஆகிலும் கிறிஸ்துவுக்குள், தேவன் பாவங்களை நினைப்பதில்லை. இயேசு தம்மைத்தாமே, ஒரு பூரணமான பலியாக அளித்தார். ''கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும் படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" **(எபிரேயர் 9:28).** "இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" **(எபிரேயர் 10:10).** சகல மனுஷருக்கும் சதாகாலத்துக்குமான பலியை இயேசு அளித்திருக்கிறார். கால்நடைகளை பலியிட்டதுபோல மறுபடியும் மறுபடியும் அது (இயேசுவின் பலி) செலுத்தப்பட வேண்டியதில்லை.

## முடிவுரை

நாம் பார்த்தபடி, பழைய உடன் படிக்கையைக் காட்டிலும் இந்த புதிய உடன்படிக்கையில் அநேக அனுகூலங்கள் காணப்படுகின்றன. வேறு சில காரியங்களும் குறிப்பிடலாம், ஆகிலும் கிறிஸ்துதான் மேலான ஒரு உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார் என்று காட்ட இது போதுமானது. நம்மிலே ஒவ்வொருவரும் இந்தப் புதிய உடன்படிக்கைக்கு உரியவர்கள் என்பதையும், வேறெதெற்காகவும் இந்த உடன்படிக்கையை விட்டுவிலாகாதிருக்க வேண்டியதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.



இந்தப் புதிய உடன்படிக்கைக்குள் வர தேவையான கட்டளைகள் எளிமையானது. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தலும் அந்த விசுவாசத்தை அறிக்கையிடுதலும் **(ரோமர் 10:9-10).** அத்துடன், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்பிற்கென்று கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுதல் **(அப்போஸ்தலர் 2:36-39).** ஆகியனவே!

# தொடர் 22 தானியேல் : அந்நிய நாட்டில் ஒரு அந்நியர்

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : தானி 1 – 12.


## தலைப்பு

தானியேலின் புத்தகம் அதை எழுதியவரைக் கொண்டு பெயரிட்டு அழைக்கப்படுகிறது (8:1). "தானியேல்" என்றால் "தேவன் எனது நியாயாதிபதியாய் இருக்கின்றார்" என்று அர்த்தப்படுகிறது.

## பின்னணி

ராஜரீக வம்சத்தைச் சேர்ந்த தானியேலும், மற்றவர்களும், கி.மு.605ல் முதலாம் சிறைப்பிடித்தலின்போது பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்டனர். இந்த வேளையில் தானியேல் தமது பிந்திய இளமைப்பருவம், அல்லது இருபதுகளின் முந்தியபருவம் உடைய ஒரு மிகச்சிறிய இளைஞராக இருந்திருக்கலாம். தானியேல் தம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தபடியால், நேபுகாத்நேச்சாரின் அரசாங்கத்தில் ஒரு மேன்மைவாய்ந்த பகுதிக்கு உயர்த்தப்பட்டார். சிறையிருப்பின் காலத்தின்போது தானியேல், அரண்மனையில் சேவை செய்தார், அதே வேளையில் எசேக்கியேல் நாடுகடத்தப்பட்டிருந்தவர்களுக்குப் பிரசங்கித்தார். (எசேக்கியேலின் புத்தகம் பற்றிய பாடத்தில் உள்ள பின்னணிக் குறிப்புகளைக் காணவும்)

தானியேலின் புத்தகத்தில், நேபுகாத் நேச்சாருக்குப் பின்பு உடனடியாக, பெல்ஷாத்சார் என்பவர் குறிப்பிடப்படுகின்றார். நேபுகாத்நேச்சாருக்கும் பெல்ஷாத்சாருக்கும் இடையில் நான்கு ஆட்சியாளர்கள் இருந்தனர் என்று உலகப்பிரகாரமான எழுத்துக்களில் இருந்து நாம் அறிகின்றோம். இவர்களில் பெல்ஷாத்சாரின் தந்தை நபோனிதாஸ் என்பவரும் உள்ளடங்கியிருந்தார். பாபிலோனின் வீழ்ச்சியில், பெல்ஷாத்சார் தனது தந்தை இல்லாத வேளையில் அரியணையில் வீற்றிருந்தார். பெல்ஷாத்சார் என்பவர் அரசாங்கத்தில் இரண்டாவது ஆட்சியாளராக இருந்ததால், "மூன்றாம் அதிபதி" என்பதே அவர் தானியேலுக்கு அளிக்கக்கூடிய மிக உயர்ந்த பதவியாய் இருந்தது (5:16, 29). சிறையிருப்பானது எழுபது ஆண்டுகள் நீடித்திருந்தால் (9:2), மேதிய-பெர்சியர் அதிகாரத்திற்கு வந்தபோது, தானியேல் தமது பிந்திய எண்பதுகள் அல்லது முந்திய தொண்ணூறுகள் வயதுடையவராய் இருந்திருக்கலாம்.



இந்தப் புத்தகம் தனிவகைப்பட்ட இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துள்ளது. முதல் பாதி வரலாற்றுரீதியானதாக உள்ளது ; கடைசிப்பாதி தீர்க்கதரிசனமாக உள்ளது. தானியேல் இப்புத்தகத்தின் முதல் பகுதியில் படர்க்கைப் பெயர்ச்சொல்லையும், இரண்டாம் பகுதியில் தன்மைப் பெயர்ச்சொல்லையும் பயன்படுத்துகிறார். ஒவ்வொரு பகுதியும் நாள்வரிசை அட்டவணை முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. அவைகள் பல ஆண்டுகள் ஒன்றின்மீது இன்னொன்று கவிந்த நிலைகொண்டுள்ளன.

தீர்க்கதரிசனப்பகுதி மிகச்சிறந்த இறைவெளிப்பாட்டு மொழிநடையைப் பயன்படுத்துகிறது. இறைவெளிப்பாட்டு இலக்கியம், தேவனுடைய மக்கள் அடக்கிவைக்கப்பட்டபோது உதித்தது. அடையாளமொழி நடையில் எழுதப்பட்ட அதன் செய்தி, உண்மையுடன் நிலைத்திருப்பவர்களுக்கு ஆறுதல் தருவதற்கானதாக இருந்தது. இந்த அடையாளங்கள் எல்லாவற்றையும் நீங்கள் புரிந்துகொள்ளாது இருந்தால் அதற்காக வருத்தப்படாதீர்கள்; தானியேலும்கூட இவையெல்லாவற்றையும் புரிந்து கொள்ளவில்லை (8:27)! (இறைவெளிப்பாட்டு இலக்கியம் பற்றிய இன்னும் அதிக விவரங்களை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கான குறிப்புகளில் காணவும்.)

## வரைகுறிப்பு

### I. வரலாற்றுப் பகுதி (1 - 6).

அ. நோபுகாத் நேச்சாரின் ஆளுகை(1–6).

1. தானியேலும் அவரது நண்பர்களும் (1).

2.நான்குவித உலோகங்களால் ஆன சிலை (2).

1. பொன்னால் ஆன தலை - முதல் ராஜ்யமான பாபிலோன் பேரரசு.

2. வெள்ளியால் ஆன மார்பும் புயமும் - இரண்டாவது ராஜ்யமான மேதிய பெர்சியப் பேரரசு.

3. வெண்கலத்தால் ஆன வயிறும் தொடையும் - மூன்றாவது ராஜ்யமான கிரேக்கப் பேரரசு.

4. இரும்பினால் ஆன கால் மற்றும் இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்கள் - நான்காவது ராஜ்யமான ரோமப் பேரரசு.

5. அக்கினிச்சூளை (3).

6. நேபுகாத் நேச்சாரின் அறிவிப்பு (4).

ஆ. பெல்ஷாத்சாரினுடைய ஆட்சியின் முடிவு ; சுவரில் கையுறுப்பு எழுதுதல் (5). நாடுகடத்தப்பட்டிருத்தலின் ஏழாம் ஆண்டு (20-23); இஸ்ரவேல் மற்றும் யூதர் ஆகியோரின் பாவங்கள்.

## II. தீர்க்கதரிசனப் பகுதி (7-12).

அ. பெல்ஷாத்சாரின் ஆளுகை (7,8).

1. நான்கு மிருகங்களைப் பற்றிய தரிசனம் (7); இது இரண்டாம் அதிகாரத்தின் நான்கு ராஜ்யங்களைப் பற்றிய தரிசனத்தைப் போன்றதாகவே உள்ளது.

2. ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா பற்றிய தரிசனம் (8); இரண்டாம் மற்றும் மூன்றாம் ராஜ்யங்களைப் பற்றிய விவரங்கள்.

ஆ. தரியுவின் ஆளுகை (9).

1. இஸ்ரவேல் மக்களின் திரும்புகைமீது தானியேல் பணியாற்றுதல் (9:1-19).

2. எதிர்காலம் பற்றிய தரிசனம் (9:20-27). "எழுபது வாரங்கள்" என்பது ஒருவேளை, மேசியாவின் ஊழியம்பற்றிய கால அட்டவணையைத் தரலாம்.

இ. கோரேஸ் என்பவரின் ஆளுகை; இரண்டாம் மற்றும் மூன்றாம் ராஜ்யங்கள் பற்றிய அதிகமான தீர்க்கதரிசனங்கள் (10-12).

## தானியேல் புத்தகத்தில் இருந்து பாடங்கள் :

அனனியா, மீஷாவேல் மற்றும் அசரியா என்று நீங்கள் குறிப்பிட்டால், அனேகமாக நீங்கள் வெறுமையான பார்வையினால் வாழ்த்தப்படுவீர்கள், ஆனால் நம்மில் பெரும்பான்மையானவர்கள் சாத்ராக், மோஷாக், ஆபேத்நேகோ என்ற தானியேலின் மூன்று நண்பர்களை அவர்களின் எபிரெயப் பெயர்களுக்கு மாறாக, அவர்களின் பாபிலோனியப் பெயர்களைக் கொண்டு அழைக்கின்றோம். நாம் அவர்களை எப்படி அழைத்தாலும் இந்த மூன்று எபிரேய இளைஞர்களும் தானியேலுடன் இணைந்து, எதிர்ப்பின் முகத்தில் உண்மைத் தன்மையுடனும் பண்பின் பலத்துடனும் இருத்தல் பற்றி, தலைமுறை தலைமுறையாக ஏவுதல் செய்யத் தொடருகின்றனர். இவர்களைப்போல், நாமும் ஒரு அந்நிய நாட்டில் அந்நியர்களாக இருக்கின்றோம் **(எபிரேயர் 11:13: 1 பேதுரு 2:11, 12):** இவர்களைப்போல் நாமும் தேவனுடைய உதவியுடன் வெற்றியாளர்களாக விளங்க முடியும் !

மனிதர்களின் ராஜ்யங்களில் தேவன் ஆளுகை செய்கின்றார் என்பது தானியேலின் புத்தகம் முழுவதும் ஊடாடுகின்ற ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது **(4:17).** இதில் உள்ள பெரும்பான்மையான தீர்க்கதரிசனங்கள் இந்தக் கருத்திற்குத் தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. தானியேலின் புத்தகம், பாபிலோனியப் பேரரசில் இருந்து ரோமப் பேரரசு, எருசலேமின் அழிவு ஆகியவை வரையிலான வரலாற்றை வரைகுறிப்பிடுகிறது **(தானியேல் 9:27: 12:11: மத்தேயு 24:15 முதல்).** உலகத்தில், விஷயங்கள் மோசமானவைகளாகக் காணப்படும்போது, தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதையும், நிறைவில் அவர் தமது திட்டங்களைச் செயல்படுத்துவார் என்பதையும் உணர்ந்தறிதல் முக்கியமாயிருக்கிறது.

தானியேலின் பல தீர்க்கதரிசனங்கள், மேசியாவின் வருகை மற்றும் அவரது ராஜ்யம் ஆகியவற்றைப் பற்றி நேரடியாக எடுத்துரைக்கின்றன. தானியேல் **2:44** வசனம், ராஜ்யம் அல்லது சபை என்பது "நான்காவது ராஜ்யமான" ரோமப்பேரரசின் நாட்களின்போது நிலைநாட்டப்படும் என்று முன்னுரைக்கிறது. தானியேல் **7:13, 14** வசனப்பகுதிகள் இயேசு பரத்துக்கேறுதலையும் அதற்கு பத்துநாட்களுக்குப்பின் யூதர்களின் பெந்தெகொஸ்தே நாளில் ராஜ்யம் நிலைநாட்டப்படுதலையும் முன்னெதிர்நோக்குகிறது

**(மாற்கு 9:1: லூக்கா 24:46-53: நடபடிகள் 1:6-12: 2:1-4, 33, 36, 47).**

# ரூத்

Louis Rushmore

**ஓர் அறிமுகம் :**

வேதாகமத்திலுள்ள சிறிய புத்தகங்களில் ரூத் புத்தகமும் ஒன்று. வெறும் 85 வசனங்கள் உள்ளடக்கிய 4 அதிகாரங்களைக் கொண்டது. இந்த



புத்தகம் என்னதான் சுருக்கமான (பகுதிகளை) விஷயங்களைக் கொண்டிருந்தாலும், அதனுடைய தாக்கம் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்குமுள்ள முக்கிய அத்தியாவசியமான தொடர்பைத் தன்னுள் தக்கவைத்துள்ளது. ரூத் புத்தகத்திற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையேயான முக்கியத்துவம் அவைகளின் இணைக் குறிப்புகளோடு நின்றுவிடவில்லை. புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான மேற்கோள்கள் பழைய ஏற்பாட்டில் இருந்து காணப்படுகிறது. அவைகளில் நான்கு, ரூத் புத்தகத்தைச் சேர்ந்தது. பழைய ஏற்பாட்டைப் பொருத்தவரை நியாயாதிபதிகள் மற்றும் 1சாமுவேல் புத்தகங்களுக்கு இடையில் பாலமாகவும், யூதர்களுக்குப் பிடித்த தாவீது மன்னனின் வம்சா வழியை அறிவிக்கிறதாகவும் ரூத் புத்தகம் இருக்கிறது. புதிய ஏற்பாட்டைப் பொருத்தவரை ரூத் புத்தகமானது, மேசியாவின் வம்சாவளியை அறிவிக்கிறதாய் இருக்கிறது.

இந்தப் புத்தகத்தின் மிகவும் மறக்கமுடியாத மற்றும் மிகச்சிறந்த வசனப்பகுதி :-

"... நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்." **(ரூத் : 1:16-17).**

இது ரூத் தன்னுடைய மாமியான நகோமியிடம் சொல்லியிருந்தாலும், இந்த ஆழம் நிறைந்த இதயப்பூர்வமான அன்பு பல நேரங்களில், நேசிப்பவர்களின் அலங்கரிக்கப்பட்ட ஆபரணமாய் இருக்கிறது. ரூத்தினுடைய அன்பின் கருப்பொருளானது, எந்த சூழ்நிலையில் எல்லாம் உச்சமான (அ) மேலான அன்பு முன்னனியில் இருக்கிறதோ, அங்கெல்லாம் பொருத்தமாகப் பொருந்தக்கூடியதாயிருக்கிறது. (எ.கா:- துணை மற்றும் குடும்பத்தார், நண்பர்கள், தகுதியே இல்லாத மனிதன்மீது தேவன் காட்டின அன்பு, மனிதன் தேவன் மீது கொண்டிருக்க வேண்டிய அன்பு போன்றவையாகும்.

## தலைப்பு

ரூத் புத்தகமானது அதனுடைய நாயகியின் பெயரைக் கொண்டுள்ளது. இவள் ஒரு மோவாபிய ஸ்திரீ; மேலும் தன்னுடைய கணவனின் மரணத்திற்குப் பிறகு விதவை மாமியாருடன் பெத்லகேமுக்குப் பிரயாணமாய் சென்றாள். இஸ்ரவேலரின் வரலாற்றில் ரூத் மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கிறாள்; ஏனென்றால், இவள் தாவீது அரசனுக்கும் (ரூத் 4:18-22) மற்றும் இயேசுவுக்கும் **(மத் 4: 1-5)** மூதாதை ஆவாள். இதில் (ஆச்சரியப்படும்) (ஆர்வப்படும்) விஷயம் என்னவென்றால் ரூத் என்கிற பெயர் பழைய ஏற்பாட்டில் ரூத் புத்தகத்தில் மாத்திரமே உள்ளது. ரூத் என்ற பெயரின் அர்த்தம், 'தோழன்' 'துணை' (அல்லது) 'அண்டை வீட்டார்' மற்றும் 'பெண் தோழி' என்பனவற்றை உள்ளடக்கியது.

- தொடரும்

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பெதஸ்தா குளத்தின் சிறப்பு என்ன?
2. பெதஸ்தா குளத்தருகே ஆண்டவர் இயேசு யாரை சுகமாக்கினார்?
3. சுகமானவனுக்கு ஆண்டவர் கொடுத்த எச்சரிக்கை என்ன?
4. இஸ்ரவேல் ஜனங்களை தேவன் எங்கிருந்து விடுவித்தார்?
5. அவர்கள் அற்புதமாக கடந்த கடலின் பெயர் என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-09-2017**

பாடம் 1

# வியாதியிலிருந்து விடுதலை

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லப் பிள்ளைகளா!

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். நம்முடைய நாட்டுக்கு விடுதலை கிடைத்ததைக் குறித்து எல்லாரும் சந்தோஷமாக இருப்பீர்கள். தேசியக்கொடி உங்கள் பள்ளிகளில் ஏற்றுவார்கள், இனிப்பு கொடுப்பார்கள். ரொம்ப சந்தோஷமாக இருப்பீர்கள். உண்மை தானே? இந்த சந்தோஷத்தோடே, 38 வருடம் திமிர்வாதம் என்னும் வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு அண்ணனுக்கு ஆண்டவர் இயேசு கொடுத்த விடுதலையைப் பற்றிக் கற்றுக்கொள்ளலாம்.



ஒரு முறை இயேசு எருசலேமுக்குப் போனார். அங்கு பெதஸ்தா என்னும் ஒரு குளம் இருந்தது. அதற்கு ஐந்து மண்டபங்களும் இருந்தது. அந்த மண்டபத்தில் பார்வை இல்லாதவர்கள், நடக்க முடியாதவர்கள் என அநேக வியாதியுள்ளவர்கள் அங்கு படுத்திருப்பார்கள். அந்தத் தண்ணீர் எப்போது கலங்கும் என்று காத்திருப்பார்கள். அந்தக் குளத்துத் தண்ணீரை யார் கலக்குவாங்க தெரியுமா? தேவதூதன் வந்து அந்தக் குளத்தில் இறங்கி கலக்குவார். அவர் தண்ணீரைக் கலக்கின பின்பு, யார் முந்தி அதில் இறங்குவானோ, அவன் எப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனாக இருந்தாலும், அவன் வியாதியெல்லாம் போய்விடும்.

அங்கே 38 வருஷம் திமிர்வாதம் என்னும் வியாதியுள்ள ஒரு அண்ணன் இருந்தான். அவன் படுத்தேதான் இருப்பான். குளம் கலங்கும்போது, அந்த அண்ணனை, குளத்தில் கொண்டுபோய்விட யாருமே அவருக்கு உதவி செய்யமாட்டாங்க. படுத்தே இருந்த அந்த அண்ணனை ஆண்டவர் இயேசு பார்த்தார். அவன் ரொம்ப காலமாக வியாதியுள்ளவன் என்று அறிந்து, அந்த அண்ணனைப் பார்த்து: 'நீ சுகமாக வேண்டும் என்று விரும்புகிறாயா?' என்று கேட்டார். அதற்கு அவன்: 'எனக்கு யாருமே உதவி செய்யமாட்டேங்கிறாங்க' என்று சொன்னான்.

இயேசு அவனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். என்ன ஆச்சரியம்! உடனே அவன் வியாதியெல்லாம் நீங்கி சுகம் பெற்று எல்லோரும் பார்க்க நடந்து போனான். அதற்குப் பின்பு இயேசு, மீண்டும் அவனை தேவாலயத்தில் பார்த்து: 'நீ சுகம் பெற்று இருக்கிறாய்; அதிகக் கேடானது உனக்கு வராதபடி இனிப் பாவம் செய்யாதே' என்றார்.

குட்டீஸ்! ஆண்டவர் இயேசு அந்த அண்ணனுக்கு வியாதியிலிருந்து விடுதலை கொடுத்தார். அவரால் உங்களுக்கும் எனக்கும் அதேபோல கொடுக்க முடியும். மேலும், அதிக கேடு வராதபடி பாவம் செய்யாதே! என எச்சரிக்கவும் செய்தார். ஏனெனில், பாவம் செய்தால் கேடானவைகள் வரும். ஆகையால், நீங்களும் பொய் பேசுவது, அம்மா அப்பாவிற்குக் கீழ்ப்படியாமல் இருப்பது, பெரியவர்களை மதிக்காமல் இருப்பது, கோபப்படுவது, படிக்கின்ற வயதில் ஒழுங்காபடிக்காமல் இருப்பது, போன்றவைகளை எல்லாம் விட்டுவிடுங்கள். மாறாக பைபிள் படியுங்கள், ஜெபம் செய்யுங்கள், சபை கூடுகைகளுக்கு தவறாமல் சென்று ஆண்டவரைத் தேடுங்கள். ஆண்டவர் உங்களுக்கு விடுதலையும், மகிழ்ச்சியும் கொடுப்பார்.

**மனன வசனம் : யோவான் 8:36**

ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்

– உங்கள் அண்ணன் **அன்பு ஏசுதாஸ்**

பாடம் 2

# அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

ஹாய் குட்டீஸ்!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய நாடு எப்படி ஆங்கிலேயர்கள் கிட்ட அடிமையாக இருந்துவிடுதலை பெற்றதைப்போல, பைபிளிலும் ஒரு கூட்ட மக்கள் இதே மாதிரி அடிமைகளாயிருந்தார்கள். அவர்களைத் தேவன் எப்படி விடுதலை பண்ணினார் என்பதைத்தான் படிக்கப்போகிறோம்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்து என்ற நாட்டில் அடிமைகளாக இருந்து வந்தனர். எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களைக் கொடுமையாய் வேலை வாங்கினார்கள். சாந்தும் செங்கலும் செய்யும் வேலையினாலும், வயலில் செய்யும் எல்லாவிதமான வேலையினாலும், இன்னும் பல வேலைகளினாலும் அவர்களைக் கொடுமையாக நடத்தினார்கள். அவர்களையெல்லாம் கொன்றுபோடும்படியும் அந்நாட்டு ராஜா கட்டளையிட்டான். எகிப்தியருடைய

கொடுமையைத் தாங்க முடியாமல் இஸ்ரவேல் மக்கள் தேவனிடத்தில் முறையிட்டனர். அதைக் கேட்ட தேவன், அவர்களை மோசே என்ற நபரின் மூலம் காப்பாற்ற விரும்பினார்.



மோசே, எகிப்து நாட்டு ராஜாவாகிய பார்வோனிடம் போய்: இஸ்ரவேல் மக்களை தேவனை வணங்கும்படி அனுப்பிவிட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டார் என்று சொன்னான். அதற்குப் பார்வோன்: 'அவர்களை நான் போகவிடமாட்டேன்' என்று தன் இருதயத்தைத் கடினமாக்கினான். அதினாலே தேவன் எகிப்தியர்களை பத்துவிதமான வாதைகளினாலே தண்டித்தார். இவையெல்லாவற்றிற்கும் பின்பே, பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை விடுவதாக வாக்களித்தான். மோசே அவர்களை எகிப்தைவிட்டுப் புறப்படும்படி செய்து, செங்கடல் மட்டும் வந்த போது, எகிப்திய ராஜாவும், ராணுவமும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தனர். அதினாலே தேவன் மோசேயைக்கொண்டு செங்கடலை இரண்டாகப் பிளந்து, இஸ்ரவேலரை வெட்டாந்தரையிலே கடலைக் கடக்கும்படி செய்தார். எகிப்தியர்கள் அதேப்போல் கடக்க நினைத்தபோது, தண்ணீரை ஒன்றாகச் சேர்த்து அவர்களை கடலிலே மூழ்க வைத்து அழித்துப்போட்டார்.

பார்த்தீங்களா குட்டீஸ்! நம்முடைய தேவன் எவ்வளவு அருமையாக தன் ஜனங்களை அவர்களுடைய கஷ்டத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறார். நம் தேவன் கஷ்டம், நஷ்டம், கவலை, கண்ணீர் மட்டுமல்ல, பாவத்திலிருந்தும் விடுதலை அளிக்கிற தேவனாயிருக்கிறார்.

**மனன வசனம் : கொலோ 1 : 13**

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்."

– குயினி பிரதீப்

**சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. A. கெனித் பெஞ்சமின் – மதுரை
2. R. சிட்டுதேவி – செங்கல்பட்டு

## பொதுவான செய்திகள்

# திருப்பூர் குமரன்



- திருப்பூர் குமரன் (அக்டோபர் 4, 1904 – ஜனவரி 11, 1932), இந்திய விடுதலைப் போராட்ட தியாகி ஆவார்.
- ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகிலுள்ள செ மேலப்பாளையம் என்னும் சிற்றூரில், நாச்சிமுத்து – கருப்பாயி தம்பதியினருக்கு முதல் மகனாகப் பிறந்தார்.
- குடும்ப சூழ்நிலைக் காரணமாக, பள்ளிப் படிப்பை ஆரம்பப் பள்ளியிலேயே முடித்துக் கொண்டார்.
- காந்தியின் கொள்கையில் அதிக ஈடுபாடு கொண்ட குமரன், நாட்டு விடுதலைக்காக காந்தி அறிவித்த போராட்டங்களில் எல்லாம் கலந்து கொண்டார்.
- 1932 ஆம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கிய போது, தமிழகம் முழுவதும் அறப்போராட்டம் பரவிய நேரத்தில், திருப்பூரில் தேசபந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் அச்சமயம் ஏற்பாடு செய்த மறியல் போராட்டத்தில் தீவிரமாக பங்குகொண்டனர்.
- 1932 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று கையில் தேசியக் கொடியினை ஏந்தி தொண்டர் படைக்குத் தலைமை ஏற்று, அணிவகுத்துச் சென்றபோது, காவலர்களால் தாக்கப்பட்டு, தடியடிபட்டு, மண்டை பிளந்து, கையில் இந்திய தேசியக் கொடியை ஏந்தியபடி மயங்கி விழுந்து, ஜனவரி 11ல் உயிர் துறந்தார்.
- இதனால் 'கொடிகாத்த குமரன்' என்றும் அழைக்கப்படுகிறார்.

# ஆகஸ்ட் மாதக் கேள்விகள்

1. நமக்கு சுயாதீன நிலையை உண்டாக்கியவர் யார்?
2. நாம் இரட்சிக்கப்படும்படி கட்டளையிடப்பட்ட நாமம் என்ன ?
3. யார் விடுதலையாக்கினால், நாம் மெய்யாகவே விடுதலையாவோம் ?
4. நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் காயப்பட்டு, நொறுக்கப்பட்டவர் யார் ?
5. நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி மீட்டவர் யார் ?
6. "பொல்லாங்கன் அவனைத் தொடான்". அவன் யார் ?
7. "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றவர் யார் ?
8. எவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு ஏற்றவராயிருக்கிறார் ?
9. "உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்றவள் யார் ?
10. "தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்". அவன் யார் ?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-09-2017**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. மத் 7:13 | 6. கலா 3:13 |
| 2. கலா 5:4 | 7. யோவான் 5:27 |
| 3. எபே 2:25 | 8. மத் 28:18 |
| 4. கலா 1:8,9 | 9. எரே 6:16 |
| 5. யோவான் 1:17 | 10. மத் 7:14 |

## சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. M. லாரன்ஸ் கோபி - வேப்பங்கனேரி
2. G. ஏஞ்சலம்மாள் - வளர்நகர்
3. Mrs. ஹெலன் திலக் - மதுரை
4. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
5. J. செல்வி ஜெயராஜ் - நாமக்கல்
6. Mrs. பிலோமினா பிரபாகரன் - காரைக்கால்
7. J. விஜய் - வளர்நகர்
8. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - வளர்நகர்
9. Mrs. ரூபாவதி நோபிள் - நெல்லை
10. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
11. Mrs. சாந்தா ஜெயக்குமார் - சென்னை
12. S. டேவிட் சாந்தகுமார் - வல்லம்
13. Mrs. J. அன்னமலர் - வத்திராயிருப்பு
14. M. தேவசகாயம் ரவி - குன்னூர்
15. R. ஷீலா - குன்னூர்
16. R. அனிதா மார்கரேட் - குன்னூர்
17. Mrs. தெபோராள் ஸ்டீபன் - சேலம்
18. Mrs. ஹெப்ஸி தாமஸ் - படப்பை
19. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
20. Mrs. ரேச்சல் தமிழரசி - மதுரை
21. Mrs. ஞான சிரோன்மணி - சமயநல்லூர்
22. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
23. Mrs. ராஜம்மாள் - திருப்பூர்
24. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
25. M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
26. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
27. G. அந்தோனி தாஸ் - பரமக்குடி
28. Dr.D.S. ஜெபநேசன் - நிலக்கோட்டை
29. Mrs. மேரி ராஜ் - மதுரை
30. Mrs. மேரி சாராள் - சமயநல்லூர்
31. Mrs. ரூபி ஜெபராஜ் - மதுரை
32. Mrs. ஷோபியா தனராஜ் - திருச்சி
33. J. ஜான்சி - ஆணைமலை
34. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
35. Mrs. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
36. G. பீட்டர் பால்ராஜ் - தூத்துக்குடி
37. S. கேத்ரின் அருள்நேசம் - மதுரை
38. P. இந்திரா பாண்டி - திருமங்கலம்
39. Mr. ஆனந்த கதிரோன் - சென்னை
40. P. சூரிய பிரியா - திருமங்கலம்
41. Mrs. ஒலிவ் தேவதாஸ் - சென்னை
42. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
43. D. எமி பர்னபாஸ் - நெடுங்குளம்
44. தேவி ராஜசிங் - திருப்பூர்
45. ராணி சாந்தகுமார் - மதுரை
46. Mrs. டெய்ஸி தர்மராஜ் - புதுக்கோட்டை
47. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
48. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
49. Sis.S. லில்லி புஸ்பம் - தூத்துக்குடி
50. Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுச்சேரி
51. D. குளோரி திலகவதி - ஈரோடு
52. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் - சென்னை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# சென்ற மாதம் நடைபெற்ற ஊழியங்களில் சில...





மஹாராஷ்டிரா மாநிலம் -- அவுரங்காபாத்தில் நடைபெற்ற J.C ஆத்தும ஆதாய பள்ளியில் நமது ஆசிரியர் வகுப்பு நடத்தியபோது
மராத்தி மொழியில் கைப்பிரதி, பத்திரிக்கை வெளியிடப்பட்டபோது...






ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற பார்வையற்றோருக்கான வேதாகம முகாமில் நமது ஆசிரியர் செய்தியளித்து,
பங்கு பெற்ற பார்வையற்ற நண்பர்களுக்கு பிரைல் மொழியில் பைபிள் பாடங்களும், பத்திரிக்கைகளும் கொடுக்கப்பட்டது.




ஒவ்வொரு மாதமும் வேதாகம முகாம்களில் பார்வையற்றோருக்கு
சிறப்பு பரிசும், அரிசியும் வழங்கப்படுகின்றது.



திருவாதவூர் சபையில் திருமுழுக்கு
பெறும் வயதான சகோதரி..




ஆத்தும ஆதாயப் பயிற்சி பெற்ற நமது செயல்வீரர்கள் மூலம், பைபிள் பாடங்கள்
படித்து முடித்தவர்களுக்கு முழு வேதாகமம் பரிசளிக்கப்படுகிறது


Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th August 2017

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்



அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
**92 4421 4421, 92 4431 4431**



பார்வையற்றோருக்கு பிரைல் மொழியில் பைபிள் பாடங்களும் பத்திரிக்கைகளும் கொடுக்கப்படுகிறது.

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers